# 23-06-2024 செய்தி

## ரயில்வே சேவைகளுக்கு வரி விலக்கு: ஜிஎஸ்டி கவுன்சில் பரிந்துரை

- தில்லியில் நடைபெற்ற 53-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில், பொதுமக்களுக்கு ரயில்வே அளிக்கும் சில சேவைகளுக்கு சரக்கு மற்றும் சேவை வரியில் (ஜிஎஸ்டி) இருந்து விலக்களிக்க அந்த கவுன்சில் பரிந்துரைத்தது.
- நடைமேடை அனுமதி சீட்டுகள், காத்திருப்பு அறைகள், உடைமைகள் பாதுகாப்பு அறை, பேட்டரி கார் சேவைகள் என பொதுமக்களுக்கு ரயில்வே அளிக்கும் சேவைகள் மீது விதிக்கப்படும் ஜிஎஸ்டியில் இருந்து விலக்களிப்பது உள்பட பல்வேறு பரிந்துரைகளை ஜிஎஸ்டி கவுன்சில் அளித்தது.

**ஜிஎஸ்டி வரம்புக்குள் பெட்ரோல், டீசல்....?**

- நிர்மலா சீதா ராமன் செய்தியாளர்களிடம் கூறுகையில், 2017-ஆம் ஆண்டு ஜூலை 1-ஆம் தேதி ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்டு பல்வேறு மத்திய, மாநில வரிகளை ஒன்றிணைத்தபோது கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, பெட்ரோல், டீசல், விமான எரிபொருள் ஆகியவையும் ஜிஎஸ்டி சட்டத்தில் சேர்க்கப்பட்டன.
- ஆனால், அவற்றின் மீது பிற்காலத்தில் ஜிஎஸ்டியின் கீழ் வரி விதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

## இந்தியா-வங்கதேசம்: 10 ஒப்பந்தங்கள்

**இணையவழி மருத்துவ விசா:**

- வங்கதேசத்தில் இருந்து இந்தியாவுக்கு மருத்துவ சிகிச்சை பெற வருவோருக்கு இணையவழியில் மருத்துவ விசா வழங்கும் வசதி தொடங்கப்படும்.
- அத்துடன், வங்கதேசத்தின் ராங்பூரில் புதிய இந்திய துணைத் தூதரகத்தை தொடங்கவும் முடிவு செய்துள்ளோம்.

**10 ஒப்பந்தங்கள்**

- கடல்சார் ஒத்துழைப்பு, நீலப் பொருளாதாரம், எண்ம கூட்டாண்மை, ரயில் போக்குவரத்து, பசுமை தொழில் நுட்பம், விண்வெளி, சுகாதாரம் மருத்துவம், பெருங்கடல் ஆய்வு உள்ளிட்ட துறைகளில் 10 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

**வங்கதேசத்தின் முக்கியத்துவம்:**

- வங்கதேசத்துடன் இந்தியா 4,096.7 கி.மீ நில எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளது.
- தெற்காசியாவில் இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளியாக வங்கதேசம் உள்ளது.
- ஆசிய நாடுகளை ஒப்பிடுகையில், இந்தியாவுக்குத்தான் அதிக அளவில் ஏற்றுமதியை வங்கதேசம் மேற்கொள்கிறது.

## தீஸ்தா நதி நீர் திட்டம்

- தீஸ்தா நதி நீர் சேமிப்பு- மேலாண்மை திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்காக, இந்திய தொழில் நுட்பக் குழு வங்கதேசம் செல்லும்.
- இரு நாடுகள் இடையே 54 நதிகள் பாய்கின்றன, அதில் முக்கியமானது தீஸ்தா நதியாகும்.
- 1996-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கங்கை நதி நீர் ஒப்பந்தத்தை தொழில்நுட்ப அளவில் மறு ஆய்வு செய்யும் பேச்சுவார்த்தையை தொடங்கவும் முடிவு செய்துள்ளோம் என்றார்.